மதுரை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய
துணை இயக்குநரின் செயல்முறை ஆணைகள்.

பிறப்பிப்பவர் : டாக்டர். கா.சண்முகசுந்தர்,
துணை இயக்குநர்.

இடம் : மதுரை.-7.

செயல்முறை ஆணை எண் : அ1/4643/2024, நாள் : 27.11.2024.

பொருள் : பணியமைப்பு – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை – வேலைவாய்ப்புப் பிரிவு – தமிழ்நாடு அமைச்சு பணிகள் – வ.சிவரஞ்சனி, இளநிலை உதவியாளர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், மதுரை-7 – இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை :

1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண்.1939/PSD-D2/2023, நாள். 04.09.2023.
2. இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை அவர்களது செயல்முறை ஆணை எண். நிர்2/13013/2023, நாள். 10.10.2023.
3. துணை இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், மதுரை அவர்களது செயல்முறை ஆணை எண். அ1/4844/2023, நாள்.11.10.2023.

*******

**ஆணைகள் :**

பார்வை (1) – இல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித்தில் நேரடி நியமனம் தொகுதி– IV–இல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு, பார்வை (2) – இல் காணும் இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை அவர்களது செயல்முறை ஆணை வாயிலாக, திருமதி. வ.சிவரஞ்சனி அவர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், மதுரை அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (3)–இல் காணும் துணை இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், மதுரை அவர்களது செயல்முறை ஆணை வாயிலாக இளநிலை உதவியாளராக பணியமர்த்தம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இவர் 18.10.2023 அன்று முற்பகல் பணியில் சேர்ந்தார்.

திருமதி. வ.சிவரஞ்சனி, இளநிலை உதவியாளர் அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 18.10.2023 அன்று முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன் வாயிலாக ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

இச்செயல்முறை ஆணையினை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை உடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

துணை இயக்குநர்.

**பெறுநர்,**
திருமதி. வ.சிவரஞ்சனி,
இளநிலை உதவியாளர்.

**நகல் ,**
இருப்புக்கோப்பு / பணிப்பதிவேடு.